மின்னஞ்சல் மூலமாக

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

முன்னிலை : பொறி.ச.மணிவண்ணன், எம்.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப்பொறியாளர்(பொது),
பொதுப்பணித்துறை

செயல்முறை ஆணை எண்: எஸ் 3(1)/007580/ 2025-8/ நாள்.11.04.2025

பொருள் : பணியமைப்பு - த.நா.பொ.சா.ப.தொகுதி - 2024-2025ஆம் ஆண்டிற்கான வரைதொழில் அலுவலர் தேர்ந்த பெயர்ப்பட்டியலிருந்து - முதுநிலை வரைதொழில் அலுவலர்(சிவில்) பதவி உயர்வு ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை : முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) , நீர்வளத்துறை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்5(3)/20524/2025-3/ நாள். 01.04.2025

------------

ஆணை:-

2024-2025 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட தேர்ந்த பெயர்ப்பட்டியலில் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைதொழில் அலுவலர்களுக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதி 2017-ன்படி நிலை-20 ரூ.37700-138500/- என்ற ஊதிய நிலையில் **முதுநிலை வரைதொழில் அலுவலர் (சிவில்)** - ஆக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 47 (அ)(1) -இன் கீழ் தற்காலிகமாக பதவி உயர்வு பெற தெரிவு செய்யப்பட்டு, அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்படுகிறது.

2. சம்மந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் இவர்களுக்கு முறையான தற்காலிக பதவி உயர்வு ஆணை மற்றும் பணியமர்வு ஆணைகளை பத்து நாட்களுக்கு பிறப்பிக்க வேண்டும்.

3. இப்பணியமர்வு ஆணையில் திருத்தம் கேட்டு வரும் எவ்வித விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மறுபணியமர்வாணைகள் கிடைக்கப் பெற்ற அன்றைய தினமே இந்த வரைதொழில் அலுவலர்களை சம்மந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் பதிலாள் எதிர்நோக்காமல் பதவி உயர்வில் பணியில் சேர ஏதுவாக விடுவிக்கப்பட வேண்டும்.

த.பி.பா.

4. முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வில் செல்ல விருப்பம் இல்லாதவர்கள் தங்கள் பதவி உயர்வின் மீதான உரிமையை நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ நடைமுறையில் உள்ள விதிகளின்படி துறக்க வேண்டும். தற்காலிகமாக பதவி உயர்வு மீதான உரிமையை துறக்கும் பட்சத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் பதவி உயர்வினை துறக்க வேண்டும். அவ்வாறு பதவி உயர்வின் மீதான உரிமையினைத் துறக்க விரும்பும் வரைதொழில் அலுவலர்களிடம் உரிய படிவத்தில் விண்ணப்பம் பெற்று சம்மந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் பதவி உயர்வு பணித் துறப்பை எந்த தேதி முதல் ஏற்கப்படுகிறது என குறிப்பிட்டு ஆணை பிறப்பித்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு உரிய செயல்முறை ஆணையின் பதிப்பு நகலுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டும்.

5. தற்காலிக பதவி துறப்பு செய்தவர்கள் மீண்டும் தங்கள் பெயர்களை பரிசீலிக்க விதிகளின்படி மூன்றாண்டுகள் காத்திருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதவி உயர்வுக்கான உரிமையை துறந்து விடுவதற்கான விண்ணப்பம்

----------------அலுவலகத்தில் வரைதொழில் அலுவலராக பணிபுரியும் நான் இப்பதவி உயர்வின் மீதான உரிமையை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 57-ன்படி தற்காலிகமாக மூன்று ஆண்டுகளுக்கு அல்லது நிரந்தரமாக விட்டுவிட இதன் மூலம் விருப்பம் தெரிவிக்கிறேன்.

ஒப்பம்

பெயர்

பதவி

நாள்

6. இப்பதவி உயர்வு ஆணை சம்மந்தப்பட்ட வரைதொழில் அலுவலர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் தலைமைப் பொறியாளர்கள்/ கண்காணிப்புப் பொறியாளர்களால், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களின் கவனத்திற்கு இதுவரையில் கொண்டு வரப்படவில்லை என்பதால், அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற நிபந்தனையின் பேரில் முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு வழங்கப்படுகிறது.

முறையான பதவி உயர்வு ஆணைகளை வழங்கப்படும் முன்னர் அரசாணை எண்.367 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை நாள்.12.11.1992-இன்படி விதி முறைகளை தவறாமல் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

7. முறையான பதவி உயர்வு ஆணைகள், மறுபணியமர்வு ஆணைகள், பதவியிலிருந்து விடுவிப்பு, பதவி உயர்வில் பணியில் சேருதல் அல்லது பதவி உயர்வு உரிமைத் துறப்பு மற்றும் அதனை ஏற்றல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் **ஒரு மாதத்திற்குள் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.**

பதவி உயர்வில் பணியில் சேராமல் அல்லது பதவி உயர்வு உரிமை துறப்பு செய்யாமல் எந்த வரைதொழில் அலுவலரையும் தொடர்ந்து வரைதொழில் அலுவலராக பணிபுரிய அனுமதிக்க கூடாது என்றும் வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறான நிகழ்வுகளில் அவர்களின் பதவி உயர்வு இரத்து செய்யப்படுவதோடு அவ்வாறு அனுமதித்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** பிற்சேர்க்கை

**ஒப்பம்/-ச.மணிவண்ணன்**
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)
பொதுப்பணித்துறை

**பெறுநர்**
பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள்
(அவர்கள் தற்சமயம் பணிபுரியம் தலைமைப் பொறியாளர்கள் மூலமாக)

**நகல்:** முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வளத்துறை ,சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

**நகல்:** அனைத்து தலைமைப் பொறியாளர்ள் பொதுப்பணித்துறை.

**நகல்:** தலைமைக் கட்டடக் கலைஞர், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5.

**நகல்:** சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள் / செயற்பொறியாளர்கள்
பொதுப்பணித்துறை

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/4/25
**கண்காணிப்பாளர்**

ப.௦௧
15/4/25

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம்,
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம் சென்னை-5

பிற்சேர்க்கை

2024-2025 ஆம் ஆண்டிற்கான வரைதொழில் அலுவலர் பதவியிலிருந்து முதுநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு பட்டியல்

செயல்முறை ஆணை எண்.எஸ்3(1)/007580/2025-8/நாள்.11.04.2025

| வ. எண் | தேர்ந்த பெயர் பட்டியல் வரிசை எண் | மு.வ. தொ.அ. பதவியில் ஒ.மு.வ.எண் | பெயர் மற்றும் பிறந்த தேதி (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பதவி உயர்வில் பணியமர்வு செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 1 | 904 | செ.அருண்பிரகாஷ் 24.06.1983 | தொழில்நுட்ப கல்விக்கோட்டம், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர் | கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், பொதுப்பணித்துறை, சிவகங்கை (திருமதி.பா.சரண்யா முதுநிலை வரைதொழில் அலுவலர் பணியிடம் மாறுதலில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடம்) |
| 2 | 3 | 1010 | எ.ஹெப்சி கோமளா 15.07.1977 | தொழில்நுட்ப கல்வி வட்டம், பொதுப்பணித்துறை, சென்னை-25 | தலைமைக் கட்டக் கலைஞர் அலுவலகம், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5 |
| 3 | 9 | 1017 | பொ.மல்லிகா 15.04.1971 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம்,மதுரை | கட்டட (கட்டுமானம்) கோட்டம், பொதுப்பணித்துறை, மதுரை (திரு.ப.சரவணக்குமார் முதுநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வில் சிறப்பு நிலை வரைதொழில் அலுவலராக செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடம்) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 11 | 1020 | ஆ.சாந்தினி<br>02.07.1974 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம்,திருச்சி | தலைமைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி (திரு.ஜெ.அந்தோணி செல்வராஜ் முதுநிலை வரைதொழில் அலுவலர் பணியிடம் மாறுதலில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடம்) |
| 5 | 12 | 1021 | மா.மேரி ஸ்டெல்லா<br>26.05.1975 | கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி | கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், பொதுப்பணித்துறை, நாகர்கோவில் (திரு.க.மாயாண்டிகுமார் முதுநிலை வரைதொழில் அலுவலர் பணியிடம் மாறுதலில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடம்) |

**ஒப்பம்/-ச.மணிவண்ணன்**
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)
பொதுப்பணித்துறை

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/4/25
கண்காணிப்பாளர்

ப.ஒச
15/4/25